இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 22.08.2026

# முதல்வர் அறையில் முறைகேடு!

“உயரமான இடத்தில் உட்கார்ந்தால்தான் இன்னும் உயரத்துக்குப் போக முடியும்” என்று ஜோசியர் சொன்னதால் தனது அறையை பத்தாவது மாடிக் கட்டடத்துக்கு முதலமைச்சர் விஜய் மாற்றுகிறார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

அந்த பத்தாவது மாடி அறையை உருவாக்குவதில் பல்வேறு டெண்டர் முறைகேடுகள் நடப்பதாக ‘Times of India’ ஆங்கில நாளேடு அம்பலப்படுத்தியுள்ளது. அந்த நாளேடு வெளியிட்டுள்ள செய்தி, த.வெ.க. அரசின் முறைகேட்டை வெளிச்சப்படுத்தி இருக்கிறது.

**“தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10-வது தளத்தில் முதலமைச்சர் விஜய்க்கான புதிய அலுவலகப் பணிகள் நடைபெற்று வருகிறது. புதிய அலுவலக மறுசீரமைப்புக்காக, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் அலுவலகப் பணிகள் என 3 டெண்டர்கள் கடந்த ஆகஸ்ட் 12 மற்றும் 13ஆம் தேதிகளில் செய்தித்தாளில் வெளியிடப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க செப்டம்பர் 1-ஆம் தேதி பிற்பகல் 3 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இந்த டெண்டர்கள் ஆன்லைனில் வெளியிடப்படவில்லை என்பது குறித்து அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 5 நாட்களுக்குப் பிறகு ஆன்லைனில் டெண்டர் வெளியிடப்பட்டது.**

**அதிலும் சர்ச்சையை ஏற்படுத்தும் விதமாக செய்தித்தாளில் வெளியிடப்பட்ட டெண்டரில் 5 கோடியே 54 லட்சம் ரூபாய் என மதிப்பு குறிப்பிடப்பட்டிருந்த நிலையில், இணையத்தில் வெளியிடப்பட்ட டெண்டரில் எந்தத் தொகையும் குறிப்பிடப்படவில்லை. இதன்மூலம் டெண்டரில் விதிமீறல் நடைபெற்றிருப்பது அம்பலமாகியுள்ளதாக பல்வேறு தரப்பினரும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.**

**அதிகாரப்பூர்வ டெண்டர் நடைமுறை முழுமையாகத் தொடங்குவதற்கு முன்பே அலுவலகத்தில் கட்டிட இடிப்பு உள்ளிட்ட சில பணிகள் நடைபெற்று வருவதாக குற்றச்சாட்டுகள் புகைப்பட ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. டெண்டர் அறிவிப்புக்கு முன்பே ஒப்பந்ததாரர் குறித்து முடிவு செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.**

**வெளிப்படைத்தன்மை, ஊழல் ஒழிப்பு என பிரச்சார மேடைகளிலும், அரசு மேடைகளிலும் பேசும் த.வெ.க. அரசு, முதலமைச்சர் அலுவலகத்துக்கான டெண்டர் விதிமீறல் சர்ச்சைக்கு முறையான பதிலளிக்குமா என்பதே பல்வேறு தரப்பினரின் கேள்வியாக உள்ளது” என்று ‘Times of India’ எழுதி இருக்கிறது.**

இன்னமும் துறைவாரியாக நிதி ஒதுக்கீடே முடியவில்லை. அதற்குள் விடப்பட்ட ஒரே ஒரு டெண்டரில் எத்தனை முறைகேடுகள்? அதுவும் முதலமைச்சர் அறையை உருவாக்குவதிலேயே முறைகேடுகள்?

பத்திரிகைகளில் விளம்பரம் வெளியாகி நான்கு நாட்கள் கழித்துதான் ஆன்லைனில் டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அந்த ஆன்லைன் டெண்டரில் ‘திட்டத்தின் மதிப்பு எவ்வளவு?’ என்பதுகுறித்த எந்த விவரமுமே இடம்பெறவில்லை என்பது எவ்வளவு மோசடியானது?

**அரசு விதிகளின்படி இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள திட்டங்களுக்கு விண்ணப்பிக்க 30 நாட்கள் அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஆனால், முதலமைச்சரின் அலுவலகப் பணிகளுக்காக வெளியிடப்பட்ட சுமார் ஐந்தரை கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று டெண்டர்களில், இரண்டு டெண்டர்கள் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தபோதிலும், அனைத்து டெண்டர்களுக்கும் விண்ணப்பிக்க வெறும் 15 நாட்கள் மட்டுமே கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைவிட மோசடித்தனம் இருக்க முடியுமா?**

**டெண்டர் யாருக்குக் கிடைத்தது என்று தேர்ந்தெடுக்கும் முன்பே டெண்டர் முதலமைச்சரின் அலுவலகப் பணிகள் தொடங்கிவிட்டது என்பதும் மோசடித்தனத்தின் உச்சம் ஆகும்.**

**விதிமீறல்கள் நிரம்பிய டெண்டர்கள்தான் த.வெ.க. அரசு சொல்லும் வெளிப்படைத் தன்மையா? ஆவணங்களிலும் பணிக்கான மொத்த மதிப்பைக் குறிப்பிடாமல் மறைத்திருப்பது வெளிப்படைத் தன்மைமிக்க ஆட்சியா? யாருடைய உத்தரவின் பேரில் பணிகள் தொடங்கப்பட்டன? எந்த அடிப்படையில் ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டார்? “வெளிப்படைத்தன்மை” என்று சொல்வதற்கான தகுதியை த.வெ.க. அரசு இழந்துவிட்டது. பணிகள் தொடங்கிய பின் டெண்டர் கோரியது ஏன்? மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் கேள்விகளுக்கு முதலமைச்சர் விஜய் என்ன சொல்லப் போகிறார்?**

இது பற்றி முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார். ‘’5.54 கோடி மதிப்பிலான இந்தப் பணிக்கான டெண்டர் ஆன்லைனில் விடப்படவில்லை. டெண்டரில் ஏதோ கோளாறு இருக்கிறது. டெண்டர் விஷயத்தில் நாங்கள் ரொம்ப வெளிப்படையாக இருப்போம் என்றீர்கள். ஆனால் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ பத்திரிக்கை இதில் உள்ள முறைகேடுகளைச் சுட்டிக் காட்டி எழுதி இருக்கிறது. இதற்கெல்லாம் உங்கள் பதில் என்ன?’’ என்று கேட்டார். முதலமைச்சர் விஜய் வாய் மூடி மவுனமாகத்தான் இருந்தார். தூய சக்திக்கு பதில் சொல்ல வாய் வரவில்லை.

பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா எழுந்து, ‘டெண்டரே இன்னும் வெளியிடவில்லை’ என்று மட்டும் சொன்னார். முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எழுப்பிய கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்திக்கும் விளக்கம் அளிக்கவில்லை. அப்பாவிகள் மீது வழக்குப் போடும் த.வெ.க. அரசுக்கு ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தி கோபத்தை வரவைக்கவில்லையா?

‘முடிந்த வேலைக்கு டெண்டர்... முதல்வர் அலுவலக சர்ச்சை’ என்று ‘ஜீனியர் விகடன்’ இதழ் (23.8.2026) செய்திக்கட்டுரை வெளியிட்டுள்ளது. “டெண்டர் வெளிப்படைத்தன்மை பேசும் ஆட்சியில் முதல்வர் அறைக்கே, முடிந்தபிறகு டெண்டர் ஏன்?’’ என்று ஜீனியர் விகடன் கேள்வி எழுப்பி இருக்கிறது.

**‘நான் பேச வேண்டிய நேரத்தில் பேசுவேன்’ என்கிறார் முதலமைச்சர் விஜய். இதுதான் அவர் பேச வேண்டிய நேரம். ஊழல் கறை அவரது கையில் ஒட்டி இருக்கிறது. விளக்கம் அளிப்பாரா விஜய்?**

••

### அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி

# தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரன் புகழ் போற்றுவோம்!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 22-

அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி, தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரன் புகழ் போற்றுவோம் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

**விடுதலைப் போரில் பங்கேற்று வீரப்போர் புரிந்த ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாள் இன்று!**

**அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகத் துணிச்சலுடன் போராடி, தமிழ் மண்ணின் வீர வரலாற்றில் அழியாத தடம் பதித்த மாவீரர் ஒண்டிவீரனின் புகழைப் போற்றுவோம்.**

**பூலித்தேவரின் படைத்தளபதியாக தென் தமிழ்நாட்டில் விடுதலைக்கான எழுச்சியை**



**உருவாக்கிய ஒண்டிவீரன் அவர்களின் வீரமும் தியாகமும் என்றும் நிலைத்திருக்கும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சிவகாசியில் பட்டாசு சில்லறை விற்பனையாளர்களின் விற்பனை நிலையங்களில் நடத்தப்படும்

# ஆய்வுகளால் - பட்டாசு உற்பத்தி பெரிதும் பாதிப்பு!

### சட்டப்பேரவையில் — முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, ஆக. 22-

விருதுநகர் மாவட்டம் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலே இயங்கி வரக் கூடிய சட்டத்திற்கு உட்பட்டு எல்லா விதமான முறையான அனுமதி பெற்று இயங்கி வரக் கூடிய பட்டாசு தொழிற்சாலைகள் மற்றும் விற்பனை இடங்களிலே ‘திடீர் ஆய்வுகள்’ என்கின்ற பெயரில் நடத்தப்படக்கூடிய சோதனைகளின் வாயிலாக அங்கே இருக்கக் கூடிய பட்டாசு தொழில் மிகுந்த பாதிப்புக்குள்ளாகிறது. அது குறித்து அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தீபாவளிக்கு முன்னாக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் தங்கம் தென்னரசு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அதற்குப் பதிலளித்து தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா பேசினார். அதனைத் தொடர்ந்து தங்கம் தென்னரசு குறிப்பிட்டதாவது:-

தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா, சிவகாசியில் இருக்கக்கூடிய பட்டாசு தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் எல்லாம் சந்தோஷக் கடலில் மிதந்து கொண்டிருப்பதைப் போன்ற ஒரு மாய பிம்பத்தை உருவாக்க முயற்சிக்கிறார். உள்ளபடியே அங்கு இருக்கக் கூடிய நிலைமை, பட்டாசு தொழில் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதை நான் அரசியல் காரணங்களுக்காகச் சொல்லவில்லை.

எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர்கள் மக்கள் பிரச்சினைக்காகப் போராடுவது என்பது ஜனநாயகத்திலே எங்களுக்கு இருக்கக்கூடிய உரிமை. நாங்கள் மட்டுமல்ல,



நாங்கள் போராட்டம் செய்து முடித்த பின்னர் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொது அமைப்பைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஒன்றுகூடி உண்ணாவிரதப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர். அந்தப் போராட்டத்தில் பொதுவாக இருக்கக்கூடிய எல்லாத் தரப்பினரும், பல்வேறு கட்சியினரும் கலந்து கொண்டுள்ளனர்.

விதிமுறையை மீறி இருக்கக்கூடிய எந்த ஒரு தொழிற்சாலை மீதும் நடவடிக்கை எடுப்பதைக் குறித்து யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் முறைப்படி விதிகளை உட்பட்டு நடக்கக்கூடிய தொழிற்சாலைகளில் ‘ஆய்வு’ என்ற பெயரில் நடக்கக்கூடிய விஷயங்கள், குறிப்பாக சில்லறை விற்பனையாளர்களின் விற்பனை நிலையங்களிலே இன்றைக்கு ‘ஆய்வு’ என்ற பெயரிலே நீங்கள் போய் நடத்தக்கூடிய காரணங்களாலே ஒட்டுமொத்தமாக இந்த பட்டாசு தொழிலில் இன்றைக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து மழைக்காலம் வரவுள்ளது, மலை பெய்யத் தொடங்கிவிட்டால் பட்டாசு தொழில் உற்பத்தி நடைபெறாது. தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இப்போது அவர்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்பு - இப்போது அவர்கள் உற்பத்தி செய்தால்தான் தீபாவளிக்கு அவர்களாலே பொருட்களைக் கொடுக்க முடியும்.

ஆனால் இந்தச் சூழ்நிலையில் அங்கே அது நடைபெறவில்லை என்பதைத்தான் நான் அரசுக்குக் கவனமாகக் கொண்டு வந்தேனே தவிர இது இந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக் கூடிய லட்சக்கணக்கான பட்டாசு தொழிலை நம்பி இருக்கக்கூடிய தொழிலாளர் களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை என்ற காரணத்திற்காகத் தான் எதிர்க்கட்சிகள் இதற்கான அனைத்து ஜனநாயக வழிகளிலும் சட்டமன்றத்தில் மக்கள் மன்றத்திலும் எடுத்து வைக்கிறோம். இதில் அரசியல் காரணங்கள் எதுவும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.

# கொலை நகரமாகும் கோவை!

### ஒரே நாளில் 3 பேர் கொலை!

*கோவை, ஆக. 22 -*

*கோவையில் ஒரே நாளில் 3 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. 19 நாளில் 7 கொலைகள் நடைபெற்றுள்ளதால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.*

*கோவை சிங்காநல்லூரில் வீட்டில் தனியாக இருந்த முதியவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார். சிங்காநல்லூரை சேர்ந்த கூலித்தொழிலாளியான வேலுச்சாமி என்பவர், குடும்பத்தினரை பிரிந்து தனியாக வசித்து வந்தார். இந்த நிலையில், வேலுச்சாமி வீட்டில் இருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் வந்து பார்த்த போது, வேலுச்சாமி ரத்த வெள்ளத்தில் சடலமாக கிடந்துள்ளார். கட்டையால் தாக்கி வேலுச்சாமி கொல்லப்பட்டது தெரிய வந்தது. இக்கொலை சம்பவம் தொடர்பாக போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.*

*இதேபோல், சூலூர் அருகே உள்ள செலக்கரச்சல் காந்திநகர் பகுதியில் ஓட்டுநர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஓட்டுநர் செந்தில்குமாரின் வீட்டின் அருகில் உள்ள கண்ணன் என்பவர், கண்டபடி வாய்க்கு வந்ததை பேசி சத்தம் போட்டு கொண்டிருந்தார். இதைப் பார்த்த செந்தில்குமார் ஏன் சத்தம் போடுகிறாய்? என கண்ணனை பார்த்து தட்டிக்கேட்டார். இதனால், திடீரென ஆவேசமடைந்த கண்ணன் அருகில் இருந்த மரக்கட்டையை எடுத்து செந்தில்குமாரை சரமாரியாக தாக்கியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த செந்தில்குமார் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்தார். இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலீசார், கண்ணனை கைது செய்தனர்.*

*இதனிடையே, கோவை ராமாட்சியம்பாளையம் பகுதியில் டாஸ்மாக் கடையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக, இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. காரணம்பேட்டை பகுதியில் வசித்து வந்த தேவதாஸ், ஒரு மாதத்திற்கு முன்பு ராமாட்சியம்பாளையம் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடைக்கு தேவதாஸ் சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த ரஞ்சித் என்பவருக்கும் தேவதாஸிற்கும் இடையே, வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது மோதலாக மாறி உள்ளது. இந்நிலையில், அதே ராமாட்சியம்பாளையம் டாஸ்மாக் கடையில் ரஞ்சித் மற்றும் அவரது நண்பர் மது அருந்திக் கொண்டு இருந்த போது, அங்கு வந்த தேவதாஸை ரஞ்சித்தும் அவரது நண்பரும் கவனித்து உள்ளனர்.*

*சிறிது நேரத்திற்குப் பிறகு தேவதாஸ் டாஸ்மாக் கடையின் பின்புறம் உள்ள நொய்யல் ஆற்றுப் பகுதியை நோக்கித் தனியாக நடந்து சென்று உள்ளார். அப்போது ரஞ்சித் மற்றும் அவரது நண்பரும் தேவதாசை படுகொலை செய்து விட்டு தப்பியோடினர். இருவரையும் காவல் துறையினர் தேடி வருகின்றனர்.*

*கோவையில் இந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் பீளமேட்டில் நவீன், கிணத்துக்கடவில் அஸ்வின், பாப்பநாயக்கன்பாளையத்தில் சாந்தி, கோவை தனியார் கல்லூரி மாணவர் அமுதன், நேற்று ஒரே நாளில் 3 பேர் கொலை என பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. கடந்த 19 நாளில் கோவையில் மட்டும் 7 பேர் கொலை சம்பவம் நடைபெறுள்ளது. த.வெ.க. ஆட்சியில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் கொலை சம்பவங்களால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.*



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 93–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.பரமேசுகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.